**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.122/2025**

**Deposition of Witness for Prosecution PW 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஸ்டாலின் | Father's Name | : | சின்னையன் |
| Village | : | மாங்குடி | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 46 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாங்குடியில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரீஷியனாக வேலை பார்க்கிறேன். 12.05.2025 ம் தேதி பகல் 12.30 மணியளவில் நானும் சந்தோஷ்ராஜ் என்பவரும் நின்றிருந்தபோது பூதமங்கலச்சேரி மதகு கட்டையருகே இருந்த மின்கம்ப Stay இரும்பு கம்பியை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் சந்தோஷ்ராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7**. மேற்படி இரும்பு கம்பி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:01:23 +0530

**சா.பொ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இறந்த நபர் என் ஊரைச் சேர்ந்தவரும் இல்லை, எனக்கு தெரிந்த நபரும் இல்லை என்றால் ஆமாம். அ.சா.ஆ.7 ல் கூடூர் அய்யனார் கோவிலில் வைத்து கையெழுத்து போட்டேன். தடய பொருள் எதுவும் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை, அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:01:30 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.122/2025

**Deposition of Witness for Prosecution PW 13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்தோஷ்ராஜ் | Father's Name | : | ரவிச்சந்திரன் |
| Village | : | பூதமங்கலசேரி | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 24 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பூதமங்கலசேரியில் வசித்து வருகிறேன். நான் Aqua Water கம்பெனியில் வேலை பார்க்கிறேன். 12.05.2025 ம் தேதி பகல் 12.30 மணியளவில் நானும் ஸ்டாலின் என்பவரும் நின்றிருந்தபோது பூதமங்கலச்சேரி மதகு கட்டையருகே இருந்த மின்கம்ப Stay இரும்பு கம்பியை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் ஸ்டாலின் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:01:43 +0530

அ.சா.ஆ.7 ஆகவும் மேற்படி அயிட்டம் சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இறந்த நபர் என் ஊரைச் சேர்ந்தவரும் இல்லை, எனக்கு தெரிந்த நபரும் இல்லை என்றால் ஆமாம். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் ஆம். தடய பொருள் எதுவும் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை, அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னுடன் கையெழுத்து போட்டவர் யரென்ற விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:01:50 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.122/2025**

**Deposition of Witness for Prosecution PW 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr. ஹரிபிரசாத் | Father's Name | : | அறிவழகன் |
| Village | : | திருவாரூர் | Taluk | | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.05.2025 அன்று பணியிலிருந்தபோது திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய கு.எண் 153/2025 வழக்கில் சம்மந்தப்பட்ட 48 வயது மதிக்கதக்க அனந்தபத்மநாபன் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய திருவாரூர் தாலுக்கா காவல் ஆய்வாளர் அவர்கள் காவலர் 1119 திரு மணிகண்டன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:01:58 +0530

கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக்கொண்டு அன்று காலை 11.20 மணிக்கு பிரேத பரிசோதனை செய்தேன். நல்ல உடல் வாகு கொண்ட ஆணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விரைப்பு உடல் முழுவதும் காணப்படவில்லை. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1) கழுத்தை சுற்றி குறுக்குவாட்டில் அழுத்தத்தினால் ஏற்பட்ட சிராய்ப்பு காயம் 33x1.5 cm அளவில் காணப்பட்டது. அந்த காயம் கழுத்து குழியிலிருந்து 8 செமீ மேலேயும், தாடை எலும்பிலிருந்து 6.5 செ.மீ. கீழேயும் காணப்பட்டது. சிராய்ப்பு காயங்களின் ஓரங்களில் சிறு, சிறு கன்றிய காயங்கள் ஆங்காங்கே காணப்பட்டது. கழுத்து பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது சிராய்ப்பு காயத்திற்கு கீழிருந்த திசுக்கள் வெளிரி காயந்த நிலையில் காணப்பட்டது. இடது பக்க கழுத்து தசைகளில் கன்றிய காயங்கள் காணப்பட்டது. நாவடி எலும்பின் இடது பக்கத்தில் எலும்பு முறிவு மற்றும் அதை சுற்றியுள்ள தசைகளில் கன்றிய காயங்கள் காணப்பட்டது. தலைப்குதியை கூராய்வு செய்து பார்த்ததில் மண்டையோடு, மூளைத்திரை சீராக காணப்பட்டது. மூளை வீக்கம் அடைந்து வெட்டு தோற்றத்தில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. நெஞ்சு பகுதியை கூராய்வு செய்ததில் இரு நுரையீரல்களிலும் ஊசி முனை கன்றிய காயங்கள் காணப்பட்டது. வெட்டு தோற்றத்தில் இரத்தம் தோய்ந்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:02:04 +0530

காணப்பட்டது. இதயத்தை கூராய்வு செய்து பார்த்தபோது ரத்த நாணங்களில் கொழுப்பு திட்டுகள் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், கணையம், இரு புற சிறுநீரகம், இடுப்பு எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 40 மிலி அளவிலான பழுப்பு நிற திரவம் பழவாடை கலந்த வாசனையுடன் காணப்பட்டது. பெருங்குடல் காற்று அடைத்து காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. உள்ளுறுப்புகள் அனைத்தும் வெட்டு தோற்றத்தில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. உள்ளுறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் அவர் மது அருந்திருந்தார் என்று அறிக்கையில் கண்டறியப்பட்டது. அந்த Toxicology அறிக்கை **அ.சா.ஆ.8**. மேற்குரிய நபர் கழுத்தை நெறித்ததால் மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்துள்ளார் என்று கருத்து கூறி சான்று வழங்கியுள்ளார். நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ.9**. அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.10**. என்னிடம் நீதிமன்றத்தில் தற்போது காணப்படும் மின்கம்ப Stay கம்பியால் இறுக்கினால் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:02:13 +0530

**குறுக்கு விசாரணை**

எனக்கு வழக்கு வரலாறு கொடுத்ததன் அடிப்படையில் சடல கூறாய்வு என்னால் செய்யப்பட்டது என்றால் சரி. இறந்த நபர் மது அருந்தியதற்கான அறிகுறிகள் தென்பட்டன என்றால் சரி. நான் பிரேத விசாரணை செய்தபோது பிரேதத்தின் நக இடுக்குகளில் பிற உடல் பகுதிகள் இல்லை எனவும் Defending Injury இல்லை எனவும் சொன்னால் சரி. பிரேதத்தில் நக கீரல்கள் தொடர்பான காயங்கள் இல்லை என்றால் சரி. ஒருவர் சுருக்கு வைத்துக் கொண்டால் கூட இதுபோன்ற காயம் கழுத்து பகுதியில் ஏற்படலாம் என்றால் இருக்கலாம். கம்பியையோ வேறு தடய பொருளையோ போலீசார் என்னிடம் காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:02:21 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.122/2025**

**Deposition of Witness for Prosecution PW 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மதியழகன் | Father's Name | : | வடுவு |
| Village | : | பூதமங்கலசேரி | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பூதமங்கலச்சேரியில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் SKV Lodge ல் மேனேஜராக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரி என் ஊர்காரர். இந்த வழக்கில் இறந்த அனந்த பத்மநாபனை தெரியும். அனந்த பத்மநாபன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:02:29 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 30.04.2025 ம் தேதி இரவு 10.30 மணியளவில் நானும் ராமகிருஷ்ணன் என்பவரும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிகொண்டு எங்கள் தெரு வாய்கால் அருகே வந்து கொண்டிருந்தபோது அனந்தபத்மநாபன் மதகில் உட்கார்ந்திருந்தார் அவரை எதிரி வீட்டிற்கு கூப்பிட்டார் அனந்தபத்மநாபன் எதிரியை திட்டினார் எப்போதும் நடப்பதுதானே என்று நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம் எனவும் மறுநாள் காலை 01.05.2025 ம் தேதி காலை 5.30 மணியளவில் சவீதா இரும்பு கம்பியால் அவரது கணவர் அனந்த பத்மநாபனை கழுத்தை இறுக்கி கொலை செய்திருப்பதாக ஊர்காரர்கள் பேசிக் கொண்டார்கள் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரி என் ஊர்காரர் என்பதால் எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:02:35 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.122/2025**

**Deposition of Witness for Prosecution PW 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராமகிருஷ்ணன் | Father's Name | : | சாமியப்பன் |
| Village | : | கீழபூதமங்கலசேரி | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 52 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பூதமங்கலச்சேரியில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் Geo Tracto Company ல் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரி என் ஊர்காரர். இந்த வழக்கில் இறந்த அனந்த பத்மநாபனை தெரியும். அனந்த பத்மநாபன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:02:43 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 30.04.2025 ம் தேதி இரவு 10.30 மணியளவில் நானும் மதியழகனும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிகொண்டு எங்கள் தெரு வாய்காலருகே வந்து கொண்டிருந்தபோது அனந்தபத்மநாபன் மதகில் உட்கார்ந்திருந்தார் அவரை எதிரி வீட்டிற்கு கூப்பிட்டார் அனந்தபத்மநாபன் எதிரியை திட்டினார் எப்போதும் நடப்பதுதானே என்று நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம் மறுநாள் காலை 01.05.2025 ம் தேதி காலை 5.30 மணியளவில் சவீதா இரும்பு கம்பியால் அவரது கணவர் அனந்த பத்மநாபனை கழுத்தை இறுக்கி கொலை செய்திருப்பதாக ஊர்காரர்கள் பேசிக் கொண்டார்கள் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரி என் ஊர்காரர் என்பதால் எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 16:02:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.